பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

UTHAYAN

சுடர்: 5 பிரமோதூத ஹூ ஐப்பசி மீ 29 உ வியாழக்கிழமை (15 11 1990) ஹிஜ்ரி 1410 ற ஆகிர் 5 கதிர் 253

# மலிவு விலையில் ஆயுதங்கள் அரசுக்கு சீனா வழங்குகிறது

## 'ஜெட்' விமானங்களும் கிடைக்குமாம்

கொழும்பு, நவம்பர் 15

இலங்கை அரசுக்கு யுத்த வாகனங்கள், நீண்ட தூரம் பாயும் ஆட்டிலறி ஆயுதங்கள் (ஷெல்கள்) ஆகியவற்றை மலிவு விலையில் சீனா வழங்கியிருப்பதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதே சமயம் சீனாவில் இருந்து 'ஏ 5'' ரக ஜெட் விமானங்களை வாங்கவும் இலங்கை அரசு முடிவு செய்திருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தரையில் முன்னேறிச் சென்றுதாக்கக்கூடிய 130 எம். எம். நீண்டதூர ஆட்டிலறி ஆயுதங்களையும், ரி-85 ரக போர்முனை வாகனங்களையுமே சீனா சிநேகபூர்வமான விலையில் விற்பனை செய்துள்ளது.

ரி-85 ரக யுத்த வாகனங்கள் எதிர்வரும் மார்ச் மாதம் கொழும்பு வந்து சேரும் என்றும்-

130எம். எம். கனரக ஆட்டிலறி ஆயுதங்கள் டிசம்பர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் - வவுனியா வீதியால் வாகனங்கள் செல்ல அனுமதி

### நான்கு மணி நேரம் மட்டுமே

வவுனியா, நவ. 15

வவுனியா-யாழ்ப்பாணம் போக்குவரத்துப் பிரதான பாதையாக இருந்து வந்த வவுனியா - குடியிருப்பு வீதி வழியே மீண்டும் வாகனங்கள் செல்வதற்கு இராணுவம் அனுமதி வழங்கி இருக்கிறது.

எனினும் இப்பாதையூடாக காலையில் 2 மணி நேரமும், பிற்பகலில் 2 மணி நேரமுமே வாகனங்கள் செல்வதற்குப் படையினர் அனுமதிக்கின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஒந்தாச்சிமடத்தில் நேற்று மூன்று சிப்பாய்கள் மரணம்

நேற்றுக்காலை 7 மணியளவில் களுவாஞ்சிக்குடி இராணுவ முகாமிலிருந்து வெளியேறி, பெரியகல்லாறு நோக்கிச்சென்ற படையினர் மீது ஒந்தாச்சிமடத்தில் வைத்து விடுதலைப் புலிகள் கிளைமோர் தாக்குதலை நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் 3 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும்-

இரு இராணுவத்தினர் காயமடைந்ததாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. [உ]

## பார்வையாளருக்கு வசதியாக யாழ். ஆஸ்பத்திரியில் தகவல் நிலையம் இயங்கும்

யாழ்ப்பாணம், நவ. 15

யாழ். போதனா ஆஸ்பத்திரியில் நோயாளர்களைப் பார்வையிட வருபவர்களுக்கு வசதியாக தகவல் நிலையம் ஒன்றை யாழ் செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் ஆரம்பிக்கவுள்ளார்கள்.

நோயாளர்களைப் பார்க்க வருபவர்களுக்கும் நோயாளிகளுக்கும் இடையே தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும் உதவிகளை வழங்கவும் இந்த நிலையம் உதவும்.

தற்போது நடைமுறையில் இருந்து வரும் பாஸ் முறையினால் நோயாளிகளைப் பார்வையிட வரும் உறவினர்களுக்கு ஏற்படும் சிரமங்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு அகதிகளுக்கு நாகர்கோவிலில் குடிசைகள்

### இன்று வழங்கும் வைபவம்

கிழக்கில் அகதியாகி வடமராட்சிகிழக்குநாகர்கோவிலில் வந்து தங்கியுள்ளவர்களுக்கு 100 குடிசைகள் இன்று கையளிக்கப்படும்.

செஞ்சிலுவைச் சங்க வேலைத் திட்டத்தின் கீழ இந்தக் குடிசைகள் அமைக்கப்பட்டன.

இன்று நடைபெற இருக்கும் நிகழ்ச்சியில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுப் பிரதிநிதிகள் கலந்துகொள்ள உள்ளனர். (ஒ-5)

## ஆசிரிய கலாசாலை அனுமதி: யாழ்ப்பாணத்திலும் பரீட்சை

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் ஆசிரிய மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெற இருக்கின்றன.

கொழும்பில் இம்மாதம் 7 ஆம் திகதி முதல் இந்த நேர்முகப்பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன.

போக்குவரத்து வசதியின்மை காரணமாக நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற முடியாத வடபகுதி ஆசிரியர்களுக்கு யாழ்ப்பாணத்தில் நேர்முகப்பரீட்சையை நடத்தக் கல்வி இணை அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலேந்திரன் பணித்துள்ளார்.

இத் தகவலைக் கல்விப் பணிப்பாளர் வெ. [illegible] உம் தெரிவித்தார் [illegible]

## படகு மீது கடற்படை சூடு! அகதிகள் ஐவர் உயிரிழப்பு!!

யாழ்ப்பாணம், நவ. 15

அலைதீவிலிருந்து 42 தமிழ் அகதிகளை ஏற்றிக்கொண்டு தமிழகம் நோக்கிச் சென்று கொண்டிருந்த படகு ஒன்றின் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தியதில் ஐந்து அகதிகள் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த திங்கள்இரவு 8 மணியளவில் புறப்பட்ட இந்தப் படகு மீது இரவு 9 15 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் -

தாக்குதலினால் படகில் இருந்த மூவர் அந்த இடத்திலேயே உயிரிழந்ததாகவும் -

படகை உயிரிழந்தவர்களின் சடலங்களுடன் சேர்த்து கடலினுள் மூழ்கடித்த படையினர், ஏனைய அகதிகளை கைது செய்து, தமது படகுகளில் ஏற்றி, கடற்படை முகாமுக்குக் கொண்டுசென்றதாகவும் -

முகாமுக்குக் கொண்டுசெல்லப்படும் வழியில் காயமடைந்த மற்றும் இரு அகதிகள் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏனைய அகதிகள் நேற்று விடுவிக்கப்பட்டதாக அறியவந்தது. [உ]

## 600 மெ. தொன் மா வந்தது

யாழ்ப்பாணம், நவ. 15

600 மெற்றிக் தொன் மாவை ஏற்றிக்கொண்டு 'சிகிரியா' கப்பல் நேற்று மாலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

இதே வேளை உணவுப் பொருள்கள், அரச திணைக்களங்களுக்கான சம்பளப் பணம், வங்கிகளுக்கான பணம், மற்றும் தபால் பொதிகளுடன் நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட 'விங்கோ றேடர்' இன்று பருத்தித்துறையை வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-5)

## லொறி மீது ஹெலி சூடு!

தென்மராட்சி, நவ 15

நேற்று முன்தினம் (செவ்வாய்) மாலை விடத்தற்பளையில் இருந்து கொடிகாமம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த லொறி ஒன்றின் மீது ஹெலியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

சாரதியும் கிளீனரும் லொறியை மரம் ஒன்றின் கீழ் விட்டு விட்டு, ஓடித்தப் [illegible] (ஒ-17)

## எம். பிக்களை இழுக்க மந்திரிப் பதவி பேரம்!

### சந்திரசேகர் தீவிர முயற்சி

புதுடில்லி, நவ. 15

அமைச்சர் பதவி தருவதாக பேரம்பேசி மேலும் பல ஜனதாதள் (வி.பி. சிங்) எம். பிக்களை தமது பக்கம் இழுப்பதற்கு சந்திரசேகர் தலைமையிலான ஜனதாதள் முயற்சி செய்துவருவதாக புதுடில்லிச் செய்திகள் தெரிவித்தன.

அப்படிப் பேரம் பேசப்பட்டவர்களில் முன்னாள் வெளியுறவு அமைச்சர் இந்தர் குமார் குஜ்ராலும் ஒருவர்என்றும் தெரிவிக்கப்பட்டது.

குஜ்ரால் தற்சமயம் வி. பி. சிங் அணியில் இருக்கிறார்.

சந்திரசேகர் அரசுமீது நம்பிக்கை கோரும் பிரேரணை நாளை வெள்ளிக்கிழமை மக்களவையில் வாக்கெடுப்புக்கு விடப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது. (அ-எ)

## கண்ணிவெடியில் சிக்கிய இராணுவ டிரக் சேதம்

யாழ்ப்பாணம், நவ 15

நேற்றுக் காலை 7 மணியளவில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தம்பலகாமம் பகுதியில் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி ராணுவ டிரக் ஒன்று முற்றாகச் சேதமுற்றது.

டிரக்கில் வந்த இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து தெரியவரவில்லை.

மொறவேவ (முதலிக்குளம்) விமானப்படை முகாமுக்கும் பன்குளம் விமானப்படை முகாமுக்கும் இடையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

தாக்குதலை அடுத்து இப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார், புதுவருட வாழ்த்துக்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விஷேட கழிவுண்டு) "மண்டேலா ரேடர்" இல. 256A, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
[14550]

### தேவை

மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ள எமது ஸ்தாபனத்திற்குத் திறமையும் அனுபவமுள்ள ரீமேக்சர் சபயிளை செய்வோர் உடன் தேவை நேரில் வரவும், பொம்பே ஜெய் சுவீற்ஸ். 260, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(14760)

### அண்ணாகோப்பி

மீண்டும் மேற்படி ஸ்தாபனம் இல 4 நவீன சந்தையில் 13-11-90 முதல் இயங்குகிறதென்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம். அண்ணா கோப்பி தயாரிப்புகளை பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.
(சி/5416)

### FUDO

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் - விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும் FUDO. 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் கிளை: பிரதான வீதி, மானிப்பாய்.
(C/5398)

### சில்வா வாச் வேக்ஸ்

மேற்படி ஸ்தாபனம் மீண்டும் இல. 10, மக்கள் நவீன சந்தை ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 12 - 11 - 90 முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதனை சகல வாடிக்கையாளர்களுக்கும் அறியத் தருகின்றோம்.
(14768)

### தேங்காய் விலை

புங்குடுதீவுப் பகுதியில் என்றுமில்லாதவாறு தேங்காயின் விலை திடீரென அதிகரித்துள்ளது. நெடுந்தீவில் இருந்து தேங்காய் வருவது தடைப்பட்டதே தற்குக் காரணம் ஆகும்,
(இ - 131)

## 3 ஆம் வருட நினைவஞ்சலி

**சுப்பிரமணியக் குருக்கள் ரவிநாதன் (கண்ணன்)**

மலர்வு:
31 - 08 - 1957

உதிர்வு:
21 - 10 - 1987

திதி: 15-11-1990

முப்பது வயதினில் உமைப் பிரிந்து மூன்றாண்டு மறைந்துவிட்ட போதிலும் நித்தமும் உம் அன்னையின் கண்ணீரும் மறையவில்லை, எமக்குன் பிரிவுத் துயரும் தீரவில்லை.

உம் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டி நிற்கும்

பெற்றோர், சகோதர சகோதரிகள், உறவினர், நண்பர்கள்.

77/2 ஆ. வ. வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.
(14766)

## யாழ். தொழில்நுட்பக் கல்லூரி

எமது கல்லூரி மீண்டும் 19 - 11 - 1990 திங்கட்கிழமை காலை 8. 30 மணிக்கு ஆரம்பமாகிறது பகல் நேரப் போதனைகள் 19 ஆம் திகதி திங்கட்கிழமையும் பகுதி நேரப் போதனைகள் 24 ஆம் திகதி சனிக்கிழமையும் ஆரம்பமாகிறது சகல வகுப்புகளும் காலை 8 30 மணிமுதல் பிற்பகல் 2 00 மணிவரை நடைபெறும்.

சி. இராசேந்திரா,
அதிபர்.

பிறவுண் வீதி,
கொக்குவில்.
13 - 11 - 1990
[சி/5412]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு:
17. 07. 1934

ஆண்டவன் அழைப்பு:
16. 10 1990

சுருவிலைப் பிறப்பிடமாயும், மானிப்பாயை வசிப்பிடமாய்க் கொண்டவருமான

அமரர்

**● சின்னத்தம்பி கந்தசாமி ●**

**(ஜீவா - நாவுக்கரசன்)**

பண்பையும் பாசத்தையும் இதயத்தில் நிறைத்து
உண்மையே தேய்த்து எமை வளர்த்த தெய்வமே!
அன்பு முகம் காணாமல் அலறும் எம் உள்ளங்கள்
ஏழ்பிறவி எடுத்தாலும் உம்முடனே சேர்ந்து வாழ
இறைவனிடம் இறைஞ்சுவதை உணர்ந்திடுவீர்
உத்தமரே!

பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள்.
மருமகன், பேரப்பிள்ளை.

"றோஸ் வில்லா"
கனகசபை வீதி,
மானிப்பாய்
[14243)

## 6 ஆம் மாத நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்:
17. 10. 1950

மறைவு:
15. 05. 1990



அமரர்

**வேலுப்பிள்ளை தங்கேஸ்வரன்**

[உரிமையாளர் ஈஸ்வரன் ஸ்ரோஸ், உடுப்பிட்டி]

எம்மில் அலைபாத ஒளியாக மிளிர்ந்து நிறைந்த எம் இனியவரே உங்கள் நினைவுகள் எம் நெஞ்சங்களை விட்டு என்றும் நீங்காது

16- 11- 1990 அன்று நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

இமையாணன்,
உடுப்பிட்டி.
(14767)

## சனசமூக நிலையங்களுக்கான உதவி நிதி வந்துள்ளது

யாழ்ப்பாணம், நவ.15

யாழ். மாவட்டத்தில் உள்ள சனசமூக நிலையங்கள், நூலகங்கள் ஆகியவற்றுக்கான உதவி நிதி வழங்குவதற்கான பணம் செயலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளது.

உள்ளூராட்சி திணைக்களத்தால் பரிபாலிக்கப்படும் சனசமூக நிலையங்களுக்கு உதவி வழங்க நான் குலட்சத்து 10 ஆயிரம் ரூபாவும், நூல்நிலையங்களுக்கு உதவி வழங்க இரண்டு லட்சத்து 15 ஆயிரம் ரூபாவும் மாகாண சபையால் அனுப்பப்பட்டுள்ளது.

அடுத்த வாரம் அளவில் சனசமூக நிலையங்களுக்கு உதவிப் பணம் காசோலையாக வழங்கப்பட இருக்கிறது.
[ஓ-3]

## பிறந்த நாள் வாழ்த்து

### ★ செல்வி நிவேதா ★

நித்தியானந்தன் நந்தினி தம்பதிகளின் அன்புப் புதல்வி நிவேதா தனது 6 ஆவது பிறந்தநாளை 17- 11- 90 அன்று (சனிக்கிழமை) சணுக்கேணி கிழக்கு முள்ளியவளையில் உள்ள தனது இல்லத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, சித்தப்பாமார், அப்பம்மா, மாமா, மாமி, பெரியன்ரி, குடும்பத்தினரும். மற்றும் கைலாசபிள்ளையார் கோவிலடியில் வசிக்கும் சதீஸ் குடும்பத்தினரும், பேபி மாமி குடும்பத்தினரும் பல்லாண்டு காலம் சீரும் சிறப்பும் பெற்று வாழ்கவென்று வாழ்த்துகின்றார்கள்

(14763]

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு 1990 - 11 - 23 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. மகப்பேற்றியலும் மாதர் நோயியலில் தற்காலிக சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II / விரிவுரையாளர்.
2. நோயியல் / உடற்றொழிலியல் / மருந்தியல் / சட்ட மருத்துவம் - விரிவுரையாளர் / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II.
3. சட்ட மருத்துவத்தில் உதவி விரிவுரையாளர் (மருத்துவம் அல்லாத)
4. சட்ட மருத்துவத்தில் விரிவுரையாளர் (மருத்துவம்)

**சம்பள அளவுத்திட்டம்:**

1. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I: ரூ: 9,600 - 8 x 250 - 11,600/- மாதமொன்றிற்கு.
2. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II : ரூ. 8,000 - 5 x 250 - 9,250/- மாதமொன்றிற்கு.
3. விரிவுரையாளர்: ரூ. 4,500 - 10 x 250- 6,500/- மாதமொன்றிற்கு (மருத்துவபீடவிரிவுரையாளர் ஒருவர் முதனாவது நியமனத்தின் போது ரூ 4500 சம்பளத்திற்கு இரண்டு படிகள் அதிகமாக அதாவது மேற்குறித்த சம்பள அளவுத்திட்டத்தில் 4,900/- ரூபாவில் வைக்கப்படுவார்.)
4. உதவி விரிவுரையாளர்: ரூ. 3,900/-மாதமொன்றிற்கு (நிலையானது) ஆண்டொன்றுக்கு.
5. தற்காலிக சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I: ரூ 9,600/- (நிலையானது)
6. தற்காலிக சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II: ரூ. 8,000/- (நிலையானது)
7. தற்காலிக விரிவுரையாளர் (மருத்துவம்): ரூ 4,900/- (நிலையானது)

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களும் விவரங்களும் இப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (தாபனங்கள்) அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

மேற்குறித்த பதவிகளுக்கு விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுய முகவரியிட்டு முத்திரையொட்டப்பெற்ற 23 x 10 ச. மீ. அளவுடைய தபாலுறை அனுப்பப்படல் வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப் படுவார்.

குறிப்பு:

(அ) விண்ணப்பதாரி பௌதிகவியலில் விஞ்ஞானமாணிச் சிறப்புப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) கரு மருத்துவத்தில் அக்கறையுடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

\- பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1990-11-09.
[சி-5413]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### புரிந்துணர்தல் சாத்தியமா?

சிங்களவர்களில் அனேகமானோர் தமிழர்களின் உரிமைகளை எதிர்ப்பவர்கள் அல்லர். நாட்டின் பிரச்சினை குறித்து சிங்கள மக்களுக்குச் சரியாக எடுத்துச் சொல்லப்படவில்லை. இடதுசாரிகள் இவ்விடயத்தில் தமது பங்களிப்பை உரிய முறையில் செலுத்தத் தவறிவிட்டார்கள்.

அந்தத் தவறினால் ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தென்னிலங்கையில் சிங்கள- பௌத்தத்தை வளர்த்தன. இன ரீதியான அரசியல் வளர்ந்தது.

இடதுசாரிகள் விட்ட தவறினால் தான், தென்னிலங்கை மக்கள் மத்தியில் தமக்கு ஆதரவில்லை என்று தமிழர்கள் எண்ணினார்கள். சிங்கள மக்களுடன் இணைந்து போராட முடியாது என நினைத்து தனித்துப் போராடத் தொடங்கினர்.

இப்படிக் கருத்து வெளியிட்டிருப்பவர் ஓர் இடதுசாரி அரசியல்வாதியான வாசுதேவ நாணயக்காரா. பழைய அரசியல் தவறுகளை, உண்மையான கோணத்தில் பார்த்துக் கவலைப்படுகிறார்.

இனப்பிரச்சினை பூதாகாரமாகி, இப்போது நடக்கும் பெரும் போராக மாறும் அளவுக்கு வளர்ந்ததிற்கு, தமிழர்களுக்குள்ள சிறப்புரிமைகள் குறித்து சிங்கள மக்கள் மத்தியில் புரிந்துணர்வு இலலாமற் போனதே அடிப்படைக் காரணம்.

புரிந்துணர்வு வந்தால் தாம் இனவாத அரசியல் நடத்த முடியாது என்று வலதுசாரி அரசியலவாதிகள் இன்னமும் நினைக்கிறார்கள். இடதுசாரிகள் தானும் 40 வருடங்களாகச் செய்ய முடியாதலதை இனிச் செய்யமுடியும் என எதிர்பார்த்தல் ஆகாது.

அவ்வாறு செய்ய வேண்டுமெனில உண்மையான, சந்தர்ப்பவாதம் இல்லாத, எதையும் தாங்கக்கூடிய, எதற்கும் முகம் கொடுக்க வல்ல ஓர் இடதுசாரித் தலைவர் சிங்கள மக்களிடையே உதிக்கவேண்டும்!

மேன்மேலும் ஆயுதங்களை வாங்கி, சிங்கள இளைஞர்களில் பெரும் எண்ணிக்கையினரை படைகளில் சேர்த்து, தமிழர்களுக்கு எதிராகப் போராட வேண்டும் என்ற வெறியை ஊட்டும் பெரும் பேரினவாதத் திட்டத்தை ஐ. தே. க. அரசு திட்டமிட்டுச் செய்து வருகிறது. ஏற்கனவே வளர்ந்து பருத்துவிட்ட இனவாதத்தை மேலும் மதாளிக்கச் செய்கிறது. அதனை அடியோடு சாய்த்து வீழ்த்தக்கூடிய அபார சக்தியுள்ள முற்போக்குவாதத் தலைமை ஒன்று தென்னிலங்கையில் உதிப்பது சாத்தியமா? தமிழர்களின் உரிமைகளைப் புரிந்துணரும் சிங்கள மக்கள் உருவாகுவார்கள் என்று எண்ணலாகுமா? அசாத்தியமாகுமா?

# முஸ்லிம் மாகாணசபை அமைக்க ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம்

## அமைச்சர் தயாரத்ன கூறுகிறார்

கொழும்பு, நவ. 15

அம்பாறை மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் பகுதிகளை உள்ளடக்கி தனியான ஒரு முஸ்லிம் மாகாணசபை அமைய நாம் ஒரு போதும் அனுமதிக்கப்போவதில்லை. வடக்கு - மாகாணத்துடன் கிழக்கு மாகாணம் இணையவும் அனுமதிக்கமுடியாது.

அமைச்சர் பி. தயாரத்னா வடக்கு - கிழக்கு நிலை பற்றி நாடாளுமன்றத்தில் நடந்த விவாதத்தின் போது முன் கண்டவாறு சொன்னார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சில முஸ்லிம் தலைவர்களின் பொறுப்பற்ற போக்கினால் தான் துப்பாக்கிகள் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்று முஸ்லிம்கள் சிந்திக்கத் தலைப்பட்டனர்.

அறந்தலாவையில் பௌத்த பிக்குகள் கொலை செய்யப்பட்டனர். அங்கு நாம் சென்றபோது அங்குள்ள சிங்கள மக்கள் தங்களுக்கு ஆயுதம் தரும்படி எம்மைக் கேட்கவுமில்லை.

அண்மையில் கிழக்கில் காத்தான்குடிப் பகுதியில் இடம் பெற்ற சம்பவங்களை அடுத்து அங்கு நானும் அமைச்சர் ரஞ்சனும் சென்றோம். அங்கே முஸ்லிம்கள் ஆவேசம் கொண்டவர்கள் போல் காணப்பட்டனர். தமிழரை பழிவாங்கும் தீவிர உணர்வுடன் அவர்கள் இருந்தனர்.

தங்களைப் பாதுகாக்க தங்களுக்கு ஆயுதம் தரும்படி கேட்டனர்.

அன்று நாம் ஆயுதங்களை வழங்கியிருந்தால் மேலும் பல ஆயிரம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டிருப்பர் — (உ)

# இதுவரை 735 படையினர் பலி! 457 பேரைக் காணவில்லை!!

## இன்னும் ஆஸ்பத்திரியில் 527 பேர்

கொழும்பு, நவ. 15

ஜூன் மாதம் முதல் கடந்த ஏழாம் திகதி வரை வடக்கு-கிழக்கு சண்டையில் ஆயுதப்படையினருக்கு ஏற்பட்ட இழப்புக்கள் பற்றிய விவரங்களை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

அவர் சொன்னதாவது:-

இதுவரை 429 இராணுவத்தினரும் 306 பொலீஸாரும் கொல்லப்பட்டனர்.

457 ஆயுதப் படையினர் காணாமற் போய்விட்டனர்.

காயமடைந்த ஆயுதப் படையினர் ஆயிரத்து 663 பேரில், ஆயிரத்து 91 படையினர் சிகிச்சை பெற்று வீடு சென்றுவிட்டனர். 527 படையினர் இன்னமும் மருத்துவமனைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர் என்றார். (உ-எ)

# மட்டக்களப்பிலும் மருந்து தட்டுப்பாடு

மட்டக்களப்பு, நவ. 15

மட்டக்களப்பு அரசினர் வைத்தியசாலையிலும் பெரும் மருந்துத் தட்டுப்பாடு நிலவுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வயிற்றோட்டம், செங்கமாரி போன்ற தொற்று நோய்கள் இப்போது தீவிரமாகப் பரவி வருகின்றன. அவற்றுக்கும், ஏனைய நோய்களுக்கும் உரிய மருந்து வகைகளுக்கு இங்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அதேவேளை மேற்சொன்ன தொற்று நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் அந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைச் சீராக்க போதிய சுகாதார ஊழியர்கள் சேவையில் இல்லாததால் பெரும் சுகாதார ஆபத்துத் தோன்றியுள்ளது. (அ-3)

### மணிக்கூண்டு வீதியில் களஞ்சியம்

யாழ்ப்பாணம், நவ. 15

யாழ்- மணிக்கூண்டு வீதியில் உள்ள கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனக் களஞ்சியம், உணவுக் களஞ்சியமாக மாற்றப்பட உள்ளது.

இந்தக் களஞ்சியம் உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கப்பல் மூலம் கொண்டு வரப்படும் உணவுப் பொருள்கள் இங்கு சேமித்து வைக்கப்படும். (ஒ-3)

### அரச அதிபர் நாளை வருவார்

யாழ்ப்பாணம், நவ.15

கொழும்பு சென்ற அரச அதிபர் அன்ரன் அல்பிரட் நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதற்கு முன்னர் திருகோணமலைக்குச் சென்று, மாகாண சபை அதிகாரிகளுடன் அவர் பேச்சுக்கள் நடத்த இருக்கிறார்.

அரச அதிபருடன் சென்ற செயலக பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு எஸ். ஐ. நித்தியராஜாவும் அவருடன் வருகிறார். [ஒ-3]

## பொறியியலாளரின் மரணம் தற்கொலை எனத் தீர்ப்பு

கொழும்பு, நவ. 15

சண்டிலிப்பாய், மாகியப்பிட்டி வாசியான ரி. வி. சரவணபவானின் மரணம் தற்கொலை என்று கோட்டை நீதிவான் திருமதி மஹேஷ் குணதிலக தீர்ப்பளித்தார்.

கோட்டையில் உள்ள இரகசியப் பொலீஸ் திணைக்களத்தின் நான்காவது மாடியில் உள்ள அறை ஒன்றின் ஜன்னல் ஊடாக பாய்ந்து சரவணபவான் தற்கொலை செய்து கொண்டதாக முன்னர் பொலீஸார் கூறியிருந்தனர்.

இராசலிங்கம் தேவராசா, வேலுப்பிள்ளை தயாளன், பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜே. பி. எல். விவேரா, நாகையா வரதராஜா, திருமதி தங்கரத்தினம் ராஜலு ஆகியோர் மரண விசாரணையின்போது சாட்சியமளித்தனர்.

கொழும்பிலுள்ள பிரபல நிறுவனம் ஒன்றுக்கு வாகனம் வாங்கச் சென்றசமயமே திரு. சரவணபவான் கைதானார் என்பது தெரிந்ததே. (ஒ-எ)

# யாழ். செஞ்சிலுவைக்கு அம்புலன்ஸ், 2 'பிக்கப்'

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்துக்கு ஒரு அம்புலன்ஸும் இரண்டு 'பிக்கப்' வாகனங்களும் அடுத்த மாதம் அளவில் வர இருக்கின்றன.

கடந்தவாரம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த செஞ்சிலுவைச் சங்க இலங்கைக் குழுத் தலைவர் திரு. நயோகி கொக்காவாவுடன், யாழ் பிரிவு அதிகாரிகள் நடத்திய பேச்சுக்களை அடுத்தே இந்த வாகனங்கள் வரவிருக்கின்றன. (ஒ-3)

### மின்சார வசதி இன்றி போதனை பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 15

யாழ். பல்கலைக்கழகம் மீண்டும் இயங்கத்தொடங்கியுள்ள போதிலும் மின்சார வசதி இல்லாததால் அங்கு கல்வி போதனை பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆய்வுகூடப் பரிசோதனைகள் கம்பியூட்டர் பிரிவு போதனைகள் ஆகியவை பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

தண்ணீர் விநியோகமும் தடைப்பட்டுள்ளது. (உ-6)

### 5 மாதங்களாக சம்பளம் இல்லை

கொழும்புத்துறை, நவ. 15

திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த நில அளவைத் திணைக்கள ஊழியர்களுக்கு கடந்த ஐந்து மாதங்களாகச் சம்பளம் வழங்கப்படவில்லை.

(இ - 30)

## நோயாளரைப் பார்வையிடும் நேரம் அதிகரிப்பு

யாழ். போதனா ஆஸ்பத்திரியில் நோயாளர்களைப் பார்வையிடும் நேரம் நேற்று முன்தினம் முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

புதிய நடைமுறையின் படி காலை 6.30 முதல் 7.30 மணிவரையிலும், பகல் 12 மணி முதல் ஒரு மணி வரையிலும், மாலை 4 மணி முதல் 5.30 மணிவரையிலும் நோயாளர்களைப் பார்வையிட முடியும்.

நோயாளரை அனுமதிக்கும் போது ஒரு "பாஸ்" வழங்கப்படும். அந்தப் 'பாஸு'டன்தான் நோயாளரை பார்வையிடுவோர் ஒவ்வொருவராகச் சென்று வர அனுமதிக்கப்படுவர். (ஒ-3)

## முழங்காவில் ஆஸ்பத்திரி மீண்டும் இயங்குகிறது

யாழ்ப்பாணம், நவ. 15

முழங்காவில் ஆஸ்பத்திரி மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் எடுத்த நடவடிக்கையை அடுத்து இந்த மருத்துவமனைக்கென தற்காலிகமாக ஒரு டாக்டர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த மருத்துவமனை நீண்டகாலமாக இயங்காதிருந்ததும்,—

அதனால் அப்பகுதிப் பொதுமக்கள் அடிப்படை வைத்திய வசதிகள் கூடக் கிடைக்காது இன்னல்பட்டதும் குறித்து செய்திகள் முன்னர் வெளியாகியிருந்தது தெரிந்ததே. (உ - 6)

### கற்சிலைமடுவில் பண்டார வன்னியன் விழா

ஒட்டுசுட்டான், நவ. 15

ஒட்டுசுட்டான் பகுதியில் உள்ள கற்சிலைமடு கிராமத்தில் பண்டாரவன்னியன் நினைவு விழா அண்மையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு அரச அதிபர் திரு. க.பொன்னம்பலம் சமுகமளித்திருந்தார்.

கற்சிலைமடுவில் உள்ள பண்டாரவன்னியன் கற்சிலைக்கு மக்கள் மலர் அஞ்சலி செலுத்தினர்.

விழாவில் கலை நிகழ்ச்சிகள், பண்டாரவன்னியன் வினா- விடைப் போட்டி, சரித்திர நாடகம், சமூக நாடகம், வரலாற்று நாடகம் என்பன இடம் பெற்றன. (இ-113)

### படை வாபஸ்; பூசை நடக்கிறது

வவுனியா குடியிருப்பு பிள்ளையார் ஆலயத்தில் இருந்து இராணுவத்தினர் வாபஸ் பெற்றுச் சென்றுள்ளனர்.

அதைத் தொடர்ந்து அங்கு நித்திய பூசைகள் நடைபெறுகின்றன. [ஒ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒப்பு நோக்குநர்

ஆகக்குறைந்தது மூன்று வருட முன் அனுபவம் உள்ள ஒப்புநோக்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பத்திரிகை அலுவலகங்களில் பணிபுரிந்தவர்களுக்கு முன்னுரிமை தரப்படும். தமிழில் தேர்ச்சியும், ஆங்கில அறிவும் அத்தியாவசியம். யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் மிகவும் விரும்பப் படுவர்.

தெரிவாகும் விண்ணப்பதாரர், மாற்றுக்கடமையில், இரவிலும் பணிபுரியுமாறு கேட்கப் படுவார். அனுபவம், திறமைக்கு ஏற்ப சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.

கல்வி, தொழில்—தகைமைச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் 20-11-1990க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

முகாமையாளர் (ஆளணி),
உதயன் வெளியீட்டகம்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## Computer Programming

### BASIC Language

சனி, ஞாயிறு வகுப்புகள்

ஆரம்பம்: 18 - 11 - 1990

FEES - மாதம் 300/-

மேலும் விபரங்கட்கு:

**School of Business Administration**
16, 3rd Cross Street,
Jaffna.

[சி-5409]

## அறிவித்தல்

யாழ். மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பிரதேச
மன்றங்களின்

### விசேஷ பொதுக் கூட்டம் - விதி 18 (1) ன் கீழ்

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் கூட்டுறவுச் சங்கங்களின் விதி இல. 18 (1) இன் கீழ் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கமைவாக பொன்னம்பலம்கணேசலிங்கம், தலைமைக்காரியாலய கூட்டுறவுப் பரிசோதகர் ஆகிய நான் மேற்படி கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் காண் பிரதேச மன்றங்களின் விசேஷ பொதுக் கூட்டத்தினை இத்தால் அழைக்கின்றேன்.

| பிரதேச மன்றம் | காலம் |
|---|---|
| உடுவில் | 18 - 11 - 90 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணி |
| நல்லூர் | 18 - 11 - 90 (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணி |
| சண்டிலிப்பாய் | 18 - 11 - 90 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 2 மணி |
| யாழ்ப்பாணம் | 18 - 11 - 90 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 3 மணி |

இடம்: சங்க மண்டபம்

நிகழ்ச்சி நிரல்:-

1. கடவுள் வணக்கம்
2. தலைவர் உரை
3. பிரதேச மன்றக் குழு உறுப்பினர்கள் ஒன்பது பேரை தெரிவு செய்தல்

குறிப்பு:
10 - 11 - 90, 11 - 11 - 90 ஆகிய திகதிகளில் நடைபெறவிருந்த மேற்படி பிரதேச மன்றங்களின் பொதுக் கூட்டம் நிறைவெண் இன்மையால நடைபெறவில்லை எனவே எல்லா அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கிறேன்.

பொ. கணேசலிங்கம்
(தலைமைக்காரியாலய
கூட்டுறவுப் பரிசோதகர்)

[சி-5411]

# பெரும் சிரமங்களின் மத்தியில்
# தீவுப்பகுதிப் படகுச் சேவை

யாழ்ப்பாணம், நவ. 15

பெரும் சிரமங்களின் மத்தியில் தீவுப்பகுதிக்கான படகுச் சேவைகள் தற்போது நடைபெற்றுவருகின்றன.

தீவுப்பகுதிக்கான படகுச் சேவைகள் படையினரின் அனுமதியுடன் நடைபெற்று வருகின்றன.

படையினரின் அனுமதி பெற்ற ப. நோ. கூ. சங்க தனியார் படகுகள் மட்டுமே சேவையில் ஈடுபடுகின்றன.

நெடுந்தீவுக்கான படகுச் சேவை திங்கள், வெள்ளிக் கிழமைகளிலும், நயினாதீவு, அனலைதீவு படகுச்சேவை ஒன்றுவிட்ட ஒருநாள் நடாத்தவும் அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

அதேவேளை எழுவைதீவுக்கான படகுச் சேவைக்கான அனுமதி இதுவரை படையினரால் வழங்கப்படாததால் மக்கள் அங்கு செல்ல முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

தீவுப்பகுதிக்கான சகல படகுகளும் நயினாதீவு இறங்குதுறைக்கு செல்ல வேண்டும் என்றும், அங்கு சோதனை மேற்கொண்ட பின்பே பயணம் தொடர அனுமதிக்கப்படும் என்றும் படையினர் கட்டுப்பாடு விதித்துள்ளனர். (இ-3)

## மீண்டும் பழைய இடத்தில்

யாழ்ப்பாணம், நவ. 15

திருநெல்வேலி விவசாயப் பண்ணைகட்டடத்தில் தற்காலிகமாக இயங்கிவந்த யாழ். மின்சாரசபையின் வடமாகாணப் பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம் மீண்டும் யாழ்ப்பாணம் கே. கே. எஸ் வீதியில் உள்ள பழைய இடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது. (இ - 5)

## மன்னாரில் மோதல்

யாழ்ப்பாணம், நவ. 15

ஞாயிறன்று மன்னார் மாவட்டம் சிலாவத்துறையில் இராணுவ முகாமிலிருந்து வெளியேற முற்பட்ட சிப்பாய்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாகவும்—

தாக்குதலை அடுத்து சிப்பாய்கள் முகாமுக்குள் பின் வாங்கியதாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. [உ]

## கூட்டுறவு ஊழியருக்கும் அலவன்ஸ்?

கொழும்பு, நவ. 15

கூட்டுறவு ஊழியர்களுக்கும் மேலதிக மாதாந்த அலவன்ஸ் வழங்க நடவடிக்கை எடுக்கும்படி உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி உத்தரவிட்டுள்ளார்.

அரசு மற்றும் உள்ளூராட்சி ஊழியர்களுக்கு இம் மாதம் முதல் மேலதிக மாதாந்த அலவன்ஸ் வழங்க அரசு தீர்மானித்துள்ளது தெரிந்ததே. (இ-எ)

## கிணற்றில் விழுந்து சிறுவன் பலி

யாழ்ப்பாணம், நவ. 15

கிணற்றில் தண்ணீர் அள்ளுவதற்கு முயன்ற சிறுவன் ஒருவன் தவறி விழுந்து மரணமானார்.

சுழிபுரத்தில் நடந்த இந்தச் சம்பவத்தில் சிவஞானம் மயூரன் (வயது 9) என்ற சிறுவனே மரணமானவர் ஆவார். (இ)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
28 - 04 - 1945
உதிர்வு:
16 - 10 - 1990

### இராசலிங்கம் கௌசலாதேவி
(தேவி)

எங்கள் அன்புத் தெய்வமே !
நீங்காத உங்கள் நினைவுகள்
நிழல்களாகி எம்மைத் தொடர்கின்றன
கழிந்துவிட்ட 31 நாட்கள் சென்றாலும்
எம் கண்ணீர் வெள்ளம் குறையவில்லை
எம்மை மறந்து எங்கேதான் சென்றீர்களோ?

உங்கள் பிரிவால் வாடும்:
அன்புக் கணவர், பிள்ளைகள்,
அருமைப் பேத்தி, உற்றார், உறவினர்.

பாரதி வீதி,
கோண்டாவில் மேற்கு. (14759)

## முதலாண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 12 | 09 | 192?



மறைவு: 28 | 10 | 1989

திதி: 15 - 11 - 1990

அமரர்

### முத்தையா நல்லையா
(இளைப்பாறிய தேசிய சேமிப்பு வங்கி, உத்தியோகத்தர்)

அன்பின் உருவாய், பண்பின் சிகரமாய், கொடையில் வள்ளலாய், வாழ்க்கையில் கலகலப்பாய் வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வம் இறைபதமடைந்து ஓராண்டு பூர்த்தியாகின்றது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

— குடும்பத்தினர்.

நீதிராசா வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். [14750]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
வேர்ஜினி சேவியர்
உதிர்வு:
15 - 11 - 87
நினைவுநாள்
15 - 11 - 90

ஆண்டு மூன்றானது
அன்னை உன் நினை
-வாலே
ஈண்டு நாம் வாழ்கி
-றோம்
இரு சரம் குவிக்கிறோம்
ஆண்டு நீ நடாத்துவார்
அரிய உன் குடும்பமே
மூண்டதோர் அன்பிலே
மூழ்கினோம் நித்தமே
உனது ஆத்மா சாந்தி
யடைய தினமும்பிரார்த்
திக்கின்றோம்.

உமது பிரிவால்
துயருறும்:

அன்புக் கணவன்
பிள்ளைகள்,
உறவினர்.

40, ரெம்பின்றோட்,
யாழ்ப்பாணம்.
[14764]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



சங்கரப்பிள்ளை
நல்லையா
(பரஞ்சோதி)
மலர்வு:
30 - 12 - 1924
உதிர்வு:
16 - 10 - 1990

''எங்கள் பொறுப்பில் உள்ள குழந்தைகளுக்கு அந்தரங்க சுத்தியுடன் கடமை செய்வதையே தலையாய பணியாக கொள்ளவேண்டும்''
-பரஞ்சோதி மாஸ்டர்
குடும்பத்தின் தலைவனாக, அன்புக் கணவனாக, பாசம் மிகுந்த தந்தையாக, மாணவர்களுக்கு நல்லாசிரியனாக, உற்றார், உறவினர், நண்பர்களுக்கு உறுதுணையாக இருந்த நீங்கள் மறைந்து 31 நாட்கள் ஆயினும் எம்நெஞ்சங்களில் இருக்கும் உங்கள் நினைவுகள் என்றும் மறையாது.

குடும்பத்தினர்.
6ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி,
திருநெல்வேலி தெற்கு,
- யாழ்ப்பாணம்.
(இ/5417)

# All Ceylon Distributors

எமது புத்தகசாலை மீண்டும் பழைய இடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

119,1/1 கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
[14762]

# நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

## O/L 90

பகல் நேர வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
நேரம் காலை 8.00 — 1 00 மணி வரை

| | |
|---|---|
| தமிழ் / சமயம் | திரு பண்டிதர் |
| விஞ்ஞானம் | திரு. இரா. செல்வவடிவேல் |
| கணிதம் | திரு ரவி |
| சமூகக்கல்வி | திரு. வேலா |
| ஆங்கிலம் | திரு. பாலசுப்பிரமணியம் |
| வர்த்தகம் | திரு. நவம் |

90, 91, 92 கலை வர்த்தக விஞ்ஞான வகுப்புக்கள் வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறுகின்றன. (14769)

# C.C.A.

[வெலிங்டன் சந்திக்கு அருகாமை]
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

கலை, வர்த்தகம்
90, 91, 92
நடைபெறுகின்றன
புதியபிரிவு ஆரம்பம்
சனி 17 - 11 - 90, 8.00 மணி

**A/L 90 Day Class**
ஆரம்பம் 21 - 11 - 90
[வழமையான ஆசிரியர்குழு] [இ/5425]

# BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)

கலை, வர்த்தகம்
A/L 90, 91
வகுப்புகள் நடைபெறுகின்றன.

A/L 92 ஆரம்பம்: 17 - 11 - 1990
சனி 8.00 A. M.

**A/L 90 Day Class**
ஆரம்பம்: 16-11-90
வெள்ளி 8.00 A.M.

[பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ளது]
[14715]

# விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

பிரிவு 2 ஆரம்பம்:-

O/L
DAY CLASSES [19-11-90] 8 30 - 1.30
SAT & SUN CLASSES [17-11-90] 8.00 - 1 00
EVENING CLASSES [19-11-90] 2.30 - 5.00

ஆண்டு 10, 9, 8, 7, 6 புதிய பிரிவு 2 ஆரம்பமாகிவிட்டது.

முக்கிய குறிப்பு:- I. கடமை, கட்டுப்பாட்டுடன் நடாத்தும் ஒரே நிறுவனம்.
II. O/L வகுப்புக்கள் தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினரால் போதிக்கப்படும்.
[illegible]

# அகதிகளுக்கு உதவி

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் தங்கி உள்ள 720 அகதிகளுக்கு கொழும்பு கொம்பனித்தெரு சைவமுன்னேற்றச் சங்கம் அரிசி, மா, சீனி பால்மா, பிஸ்கட். சவர்க்காரம் போன்ற அத்தியாவசிய பொருள்களை வழங்கியது
(இ - 86)

# விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

கலை, வர்த்தக
வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்.

**92** கலை; வர்த்தக
பிரிவு 1 ஆரம்பம்: 17. 11. 90
(காலை 8 மணி)

**91** DAY CLASSES
19. 11. 90 (காலை 9 மணி)

90, 91 இற்கான Day Classes Sat, Sun வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முக்கிய குறிப்பு:
i கலை, வர்த்தக வகுப்புக்கள் தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படுகின்றது.
ii மாணவர்கள் முன்கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.
(இ/5423)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு: - 13 - 02 - 1942
இறப்பு: - 16 - 10 - 1990



திதி: - 15 — 11 — 90

## திருமதி நடராசா ஞானாம்பாள்

யாரிடம் செல்வோம் யாரிடம் செல்வோம்
எமக்கெல்லாம் நீ தானே.
கண்ணை இமை காத்ததுபோல் காலம் எல்லாம்
எமை காத்துவந்தாயே!

அன்னாரின் ஆத்மா சாந்திக்காக நடைபெற்ற சகல இறுதிக் கிரியைகளிலும் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்.

1 ஆம் வட்டாரம்,
அனலைதீவு.

# மரண அறிவித்தல்

## செபஸ்ரியாம்பிள்ளை பொன்றாஜ்

நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்ட செபஸ்ரியாம்பிள்ளை பொன்றாஜ் காலமாகிவிட்டார். இவர் மேரி மாத்தா யோசப்பின் (சொர்ணம்) அன்புக் கணவரும், அன்ரன் பயஸ் (சுவீடன்) அன்ரனிற்றா, றதினி [அவுஸ்திரேலியா), அனிஸ்ரன் கயஸ் [கனடா), ஒஸ்ரன்டலஸ் [கனடா], லின்ரன் றூபஸ் [டென்மார்க], டனிஸ்ரன் பவல்ஸ், யூக்கலிஸ்ரா, றமணி ஆகியோரின் அன்புத் தந்தையும ஆவார். அனுசா, சபிரியல், மதுரநாயகம் (பொறியியலாளர் அவுஸ்திரேலியா] ஆகியோரின் அன்பு மாமனாரும், மிஷல் மேரியோவின் அன்பு பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் வியாழக்கிழமை 15-11-90 இன்று மாலை 4 மணியளவில் நாரைந்தனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். உற்றார். உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தல்களை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
A. சில்வஸ்ரர்.
(14770)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநேக சிங்களவர் தமிழரின் உரிமைக்கு எதிர்ப்பு அல்லர்

## வாசுதேவ கூறுகிறார்

தலவாக்கொல்லை, நவ. 15
சிங்கள மக்களில் பெரும்பான்மையானோர் தமிழர் உரிமைகளை எதிர்ப்பவர்கள் அல்லர். இதற்காக சிங்கள மக்கள் மத்தியில் இனவாதம் இல்லை என்று நான் கூற வரவில்லை. இடதுசாரிகள் சரியான முறையில் பிரச்சினையை எடுத்துச் சென்றிருந்தால் இனவாதத்தை ஒழித்திருக்கலாம்.

தலவாக்கொல்லை விந்துல நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற நவசமசமாஜக் கட்சிக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய வாசுதேவ நாணயக்கார மேற்கண்டவாறு கூறினார்:

வாசுதேவ நாணயக்கார மேலும் பேசுகையில் கூறியதாவது:-

ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தென்னிலங்கையில் சிங்கள பௌத்தத்தை வளர்த்தன. வலதுசாரிகளுக்கு எதிரான இடதுசாரிகள் தோற்கடிக்கப்பட்டனர். இதனால் இனரீதியான வேறுபாடுகள் அதிகரிக்க ஆரம்பித்தன.

நான் போட்டியிட்ட எஹலியகொட தேர்தல் தொகுதி சிங்கள பௌத்த மக்கள் நிறைந்தது.

மலையகத்தில் உள்ள தமிழர்கள் தாம் விரும்பும் குடியுரிமை பெற வழி செய்யப்படவேண்டும் எனவும், வடக்கு-கிழக்குத் தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும் என்றும் கோரிப் பிரசாரம் செய்தே நான் அத்தொகுதியில் வெற்றி பெற்றேன். வெற்றி-தோல்விகளைக் கருதி தாம் கொள்கைகளை இடத்துக்கு இடம் மாற்றுவதில்லை.

இப்படி அவர் கூறினார்.

# கிளாலியில் ஹெலி தாக்கு

தென்மராட்சி, நவ. 15
கிளாலியில் நேற்று முன்தினம் (செவ்வாய்) உணவுப் பொருள்களை படகில் இருந்து லொறிக்கு ஏற்றிக்கொண்டிருந்த சமயம், ஹெலி ஒன்று தாக்குதல் நடத்தியது.

நண்பகல் 12 மணிக்கும் ஒரு மணிக்குமாக இரு தடவைகள் வந்த ஹெலி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததுடன், கிரனேட் தாக்குதலும் நடத்தியது.

[ஒ-117]

# ஜீ. சி. ஈ. பரீட்சை: விண்ணப்ப திகதியை நீடிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 15
ஜீ. சி. ஈ. (சாதாரண) பரீட்சைக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் இறுதித் திகதியை நீடிக்க வேண்டும்.

யாழ் - கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் பரீட்சை ஆணையாளரிடம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் அவர் அனுப்பிய இந்தக் கோரிக்கையில்-

பெரும்பாலான மாணவர்கள் இடம் பெயர்ந்துள்ளதாலும், பல பாடசாலைகள் இயங்க முடியாத நிலையில் உள்ளதாலும்-

பரீட்சைக்கான விண்ணப்பம் அனுப்பும் திகதியை நீடிக்கவேண்டும்- என்று கோரியுள்ளார். (இ-3)

# கூட்டுறவு ஊழியருக்கு கஷ்ட நிவாரணப் படி

## பணமாக வழங்க இணக்கம்

யாழ்ப்பாணம், நவ. 15
யாழ் - மாவட்டத்தில் கடமையாற்றி வரும் கூட்டுறவுத் துறை ஊழியர்களுக்கு கஷ்ட நிவாரணப் படி பணமாக வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

யாழ் - மாவட்ட கூட்டுறவுத் துறை ஊழியர்கள் இக்கட்டான காலத்தில் கடமையாற்றியபடியால், அவர்களுக்கு கஷ்ட நிவாரணப் படி வழங்க வேண்டும் என்று அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் கூட்டுறவு அமைச்சு அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களின் போது வற்புறுத்தினார்.

அதை அடுத்தே மேற்கண்ட இணக்கம் காணப்பட்டதாக அறிய வந்தது.

(ஒ-3)

# தமிழரின் கல்வியை சீரழிக்க அரசாங்கம் திட்டமிடுகிறது

## ஆசிரியர் சங்க செயலாளர் பேச்சு

யாழ்ப்பாணம், நவ. 15
சுயவிருப்பத்தின் பேரில் இளைப்பாறும் திட்டத்தின் கீழ் 85 வீதமான ஆசிரியர்கள் ஓய்வுபெற்று விடுவார்கள். அதன் பின்னர் சேவை மூப்பு அற்ற, பயிற்சி அற்ற 15 வீதமான ஆசிரியர்களே மிஞ்சுவார்கள். இந்தத்திட்டத்தின் மூலம் தமிழரின் கல்வியை அரசு சீரழிக்கத் திட்டமிடுகிறது.

இவ்வாறு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் நல்லூரில் சங்கத்தின் புதிய அலுவலகத் திறப்பு விழாவில் பேசுகையில் தெரிவித்தார்.

முன்னாள் மாவட்ட செயலாளர் திரு. சிவபாலசிங்கம் மங்கள விளக்கேற்றி அலுவலகத்தை திறந்து வைத்தார்.

(ஒ-3)

# பிலிப்பீன்ஸில் 60 பேர் பலி

மணிலா, நவ. 15
பிலிப்பீன்ஸில் நேற்று 600 கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய புயல் காரணமாக 60 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 15 - 11 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ம. எண்ணெய்: தடை நீக்கம்

வவுனியா, நவ. 15
வவுனியாவில் இருந்து வடபகுதிக்கு எந்தவித கட்டுப்பாடும் இன்றி மண்ணெண்ணெய்யை எடுத்துச்செல்லமுடியும். ஏற்கனவே இருந்த தடை நீக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

எனினும் ஏனைய எரிபொருள் வகைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடை தொடர்ந்து இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ)

# கடற்படை முகாம் மீது தாக்குதல்

நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் காரைநகர் கடற்படை முகாம் மீது விடுதலைப் புலிகள் "அருள் 89" தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலில் ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை. [உ]

# கால் இழப்பு

யாழ்ப்பாணம், நவ. 15
நேற்று முன்தினம் மன்னார் மாவட்டம் பேசாலையில் இருந்து தலைமன்னார் நோக்கிச் சென்ற இராணுவத்தினர் வழியில் விடுதலைப் புலிகள் வைத்த மிதிவெடிகளில் சிக்கினர்.

இதனால் மூன்று சிப்பாய்கள் தமது கால்களை இழந்ததாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

## மலிவு விலையில்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

அளவில் வந்து சேரும் என்றும் எதிர்பார்க்கப்படுவதாகவும் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம்—

சீனாவில் இருந்து ஏ 5 ரக ஜெட் விமானங்களை வாங்க இலங்கை அரசு முடிவு செய்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இவ்விமானங்களைச் செலுத்துவதற்கான பயிற்சி பெற இலங்கை விமானிகள் சீனா சென்றுள்ளனர் என்றும் —

கப்பல் கட்டும் தளம் ஒன்றை சீனாவின் உதவியுடன் அமைக்கவும் அரசு ஏற்பாடுகள் செய்து வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் சிறுரக ஆயுதங்களையும் மற்றும் போர் முனை வாகனங்களையும் வாங்கும் முயற்சியிலும் இலங்கை அரசு ஈடுபட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

## யாழ் ஆஸ்பத்திரி..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களை இந்த தகவல் நிலையம் மூலம் குறைத்துக் கொள்ள முடியும்.

இந்த நிலையத்தின் மூலம் பார்வையிடுவோர் வெளியே இருந்தபடியே வார்ட்டில் உள்ள நோயாளி பற்றிய விவரங்களை அறிந்து கொள்ளலாம்.

நாளை வெள்ளிமுதல் இந்த நிலையம் செயற்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

[ஒ-5]

## கண்ணிவெடி...

பகுதியில் இரண்டு பொம்மர்களும், ஹெலிக்கொப்டர் ஒன்றும் குண்டு வீசித் தாக்குதல்களை நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் இப்பகுதியில் ஊர்காவற்படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இரண்டு ஊர்காவலர்கள் உயிரிழந்ததாகவும்—

அவர்களிடம் இருந்து ஒரு சொட்கன், மூன்று ரவைகள் ஆகியவை மீட்கப்பட்டதாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# ஈ.பி. டி. பி. இயக்கத்தவர் கொழும்பு நகரில் தேடுதல்

கொழும்பு, நவ. 15
டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ. பி. டி. பி. இயக்க உறுப்பினர்கள் கொழும்பில் திடீர் திடீரென தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகிறார்கள் என அறிவிக்கப்படுகிறது.

சந்தேகப்படும் தமிழர்களைப் பிடித்துப் பாதுகாப்புப் படையினரிடம் ஒப்படைக்கும் வேலையில் தமது உறுப்பினர்கள் ஈடுபட்டு வருகின்றனர் என்று ஈ பி. டி. பியின் செயலாளர் ரமேஷ் தெரிவித்துள்ளார்.

தமிழர் இயக்கம் ஒன்றின் ஆதரவாளர்களையே தாம் தேடிப் பிடிப்பதாக அவர் தெரிவித்தார். (ஒ-எ)

# உறவினர் அனுப்பிய பொதிகள் செஞ்சிலுவை அலுவலகத்தில்

யாழ்ப்பாணம், நவ. 15
யாழ்ப்பாணத்தில் உள்ள தமது உறவினர்களுக்காக கொழும்பில் வைத்து செஞ்சிலுவைச் சங்கத்திடம் வழங்கப்பட்ட கடிதங்கள் மற்றும் பொதிகள் என்பன யாழ். செஞ்சிலுவைச்சங்க அலுவலகத்தில் தேங்கியுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் மானிப்பாயிலும் யாழ்நகரிலும் இயங்கும் செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் வந்து அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. [ஒ-5]

## பிரிட்டிஷ் பிரதமர்

# தாட்சரின் தலைமைக்கு ஆபத்து வரும் அறிகுறி!

லண்டன், நவ. 15
பிரிட்டிஷ் பிரதமராக கடந்த பதினொரு ஆண்டுகளாக இருந்துவரும் திருமதி மார்கரட் தாட்சரின் தலைமைக்கு சவால் விடப்பட்டுள்ளது.

ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் பதவிக்கு திருமதி தாட்சருக்கு எதிராகப் போட்டியிடப்போவதாக முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் மைக்கல் ஹெஸல்ட்லைன் நேற்று அறிவித்தார்.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கன்சேர்வேட்டிவ் கட்சியின் தலைவரைத்தெரிவு செய்வதற்காக முதற்கட்ட வாக்களிப்பு நடைபெறவுள்ளது.

தனக்கு நூறுக்கும் அதிகமான எம். பிக்களின் ஆதரவு இருப்பதாக திரு. மைக்கல் ஹெஸல்ட்லைன் அறிவித்திருக்கிறார்.

கடந்தவாரம் பதவி விலகிய துணைப்பிரதமர் சேர் ஜெப்ரி ஹோவும், திரு. ஹெஸல்ட்லைனுக்கு ஆதரவாக வாக்களிக்கப்போவதாக அறிவித்துவிட்டார். [அ-எ]

## யாழ் வவுனியா ..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

றனர்.

காலையில் 6 மணி தொடக்கம் 8 மணி வரையும், பிற்பகல் 4 மணி தொடக்கம் 6 மணி வரையும் மேற்படி பாதை வழியாக வவுனியா நகரில் இருந்து வெளியேயும், ஏனைய இடங்களில் இருந்து நகருக்கு ஊடாகவும் இனி மேல் பயணம் செய்ய முடியும்-

கால் நடையாகச் செல்லும் பொதுமக்கள் காலை 8 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை இவ்வீதி வழியாகச் செல்லலாம் என்றும் படையினர் அறிவித்துள்ளனர். (ஒ)

# மிதி வெடியில் சிக்கினர்

யாழ்ப்பாணம், நவ. 15
அம்பாறை மாவட்டத்தில் உள்ள மாந்தோட்டம் இராணுவ முகாமைச் சூழவுள்ள பிரதேசத்தில் விடுதலைப் புலிகள் வைத்த மிதி வெடியில் நேற்றுக் காலை 7-30 மணிக்கு சில இராணுவத்தினர் சிக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏற்பட்ட சேத விவரம் குறித்து முழுமையான தகவல்கள் கிடைக்கவில்லை. (உ)


# மரண அறிவித்தல்

## திருமதி மகாதேவி முத்ததம்பி

திருமதி மகாதேவி முத்ததம்பி காலமாகிவிட்டார்.

இவர் Dr. N. முத்ததம்பியின் அன்பு மனைவியும், சிறீகாந்தா (Swiss), காலஞ்சென்ற மகேந்திரராஜா (T.O), திருமதி கற்பகமலர் ரெட்ணசிங்கம், நவராஜா (Swiss), திருமதி சூரியகலா தில்லைநடராஜா (Canada), பாமினி (India) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி திலகவதி சிறீகாந்தா (Swiss), திருமதி சகுந்தலாதேவி மகேந்திரராஜா (Canada), திரு. ரெட்ணசிங்கம் (Store-Keeper, Paranthan), திரு. தில்லைநடராஜா (Canada) ஆகியோரின் அன்பு மாமியாரும், லவீந்திரன் (Swiss), நந்தகோபால், கல்பனா, ரஜீவன் (Canada), அலோஜன் (Canada) ஆகியோரின் அன்புப் பேத்தியும், திருமதி நாகரெட்ணம்பாள் தியாகராஜா, காலஞ்சென்ற திரு. இராமநாதன் (T.O), திருமதி புனிதவதி சிவசுப்பிரமணியம், Dr. பூலோகநாதன் (U.K), திரு. கயிலைநாதன் (Cement Corporation, K.K.S) திருமதி பாலாம்பிகை சிவகுமார் (U.K) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14-11-1990 (புதன்) பிற்பகல் 1-00 மணியளவில் துண்டி மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

"தேவி பவனம்",
இல. 9/1, புது வீதி,
கொய்யாத் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

Dr. N. முத்ததம்பி
(கணவன்)

[14296]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org